**செய்தி வெளியீடு எண்.440** **நாள்– 14.7.2007**

# மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில்

## தமிழ் நாடு அரசு – எம்.பி.பி.எல் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு அரசுக்கும் எம்.பி.பி.எல் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும் இடையே இன்று (14.7.2007); புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான பொருட்களை தயாரிப்பதற்கான பிரிவுகளுடன் தொழில் மையம் ஒன்றைத் தமிழ்நாட்டில் அமைப்பதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்களும் உடனிருந்தார்.

மும்பையைச் சேர்ந்த கமலா நிறுவன குழு மற்றும் எம்.பி.பி.எல் நிறுவனத்தால் இணைந்து எதிர்கால எரிசக்தி மண்டலம் (Future Energy Zone) என்ற பெயருடைய தொழில் மையம் நிறுவப்படும். புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முன்னோடியான திட்டங்களை எம்.பி.பிஎல் நிறுவனம் செயல்படுத்தியிருக்கிறது. கட்டுமானம், மின்னணு மற்றும் ஜவுளி போன்ற துறைகளில் கமலா குழு குறிப்பிடத்தக்க முதலீடுகள் செய்துள்ளது.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உற்பத்தி பொருள் பரிசோதனை மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் மனிதவள மேம்பாடு ஆகியவற்றிற்கான வசதிகளை இத்தொழில்நுட்ப பூங்கா கொண்டிருக்கும். உயிரி கொதிகலன்கள் போன்ற புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பொருட்களை தயாரிக்கும் அலகுகள், உயிரி எரிவாயு உற்பத்தி இயந்திரங்கள் மற்றும் டைஜஸ்டர்கள், சிறப்பு எரிவாயு என்ஜின்கள், சூரிய வெப்ப தகடு பொருட்கள், கார்பன் எரிசக்தி பேட்டரிகள், உயிரி எரிபொருள் சுத்திகரிப்பு இயந்திரங்கள்

முதலியவற்றைத் தயாரிக்கும் தொழிற்பிரிவுகளுக்கு இத்தொழிற் பூங்கா இடமளிக்கும். இத்தொழில் மையத்திற்கான உட்கட்டமைப்பில் ரூபாய் 900 கோடிக்கு மேல் முதலீடு செய்யப்படவுள்ளது.

473 கோடி ரூபாய் முதலீட்டில் உயர்அறிவுசார் சொத்துடனும் தொழில் நுட்பத்துடனும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்திக்கான பொருட்களை தயாரிப்பதற்காக பல்வேறு கூட்டு நிறுவனங்களை எதிர்கால எரிசக்தி மண்டலம் ஏற்படுத்தும்.

ஆக, இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் மொத்த முதலீடு ரூபாய் 1373 கோடி ஆகும். எதிர்கால எரிசக்தி மண்டலம் சுமார் 5000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளையும், 10,000 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும். காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டத்தில் 215 ஹெக்டேர் நிலத்தில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2008 ஆம் ஆண்டு முடிவில் இத்தொழில் மையத்தின் முதற்பகுதி நிறுவப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது,

தமிழக அரசின் சார்பில், தொழில் துறைச் செயலாளர் திரு சக்திகாந்த தாஸ், இ,ஆ.ப., மற்றும் எம்.பி.பி.எல் நிறுவனத்தின் தலைவர் திரு எஸ்.கிருஷ்ன், கமலா குரூப்பின் தலைவர் திரு ஆர்.பி.லாட், இயக்குநர், திரு ரமேஷ் கோவானி, திரு எம்.எச்.சானே, திரு என்.கே. சாஸ்திரி, ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானபோது உடனிருந்தனர். இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலர், திரு எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., மைய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி துறைச் செயலாளர் திரு வி.சுப்பிரமணியன், இ.ஆ.ப., திரு ஆர். சதபதி, இ.ஆ.ப., திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., திரு இளங்கோவன், இ.ஆ.ப., ஆகியோரும் உடனிருந்தனர்.

**வெளியீடு** : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9

*****